

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (8.5.2025) திருச்சிராப்பள்ளி சுற்றுலா மாளிகையில், திருச்சி பத்திரிகையாளர்கள் சங்கத்தின் (Tiruchi Press Club) புதிய நிருவாகிகளான தலைவர் சி. ஜெய்சங்கர், துணைத் தலைவர்கள் சகாய ஜெயராஜ், கே. கணேசன், செயலாளர் ராஜ்குமார், பொருளாளர் குணசேகரன், செயற்குழு உறுப்பினர் எம்.ஆர்.விஜய கோபால் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நேற்று (8.5.2025) திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு வருகை தந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு, டி.வி.எஸ். டோல்கேட் முதல் கரூர் பைபாஸ் சாலை வரையில், பொதுமக்கள் அளித்த உற்சாக வரவேற்பு.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.5.2025) பள்ளிக் கல்வித் துறை சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடி அரசு பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் கட்டப்பட்டுள்ள அரசு மாதிரிப் பள்ளிக்கான புதிய கட்டடங்களைத் திறந்து வைத்து, தமிழ்நாட்டில் உள்ள அரசு மாதிரிப் பள்ளிகளில் பயின்று, மாநிலத்தில் உள்ள உயர்கல்வி நிறுவனமான தேசிய தொழில்நுட்ப கழகம் (National Institutes of Technology) போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் பயின்றுவரும் மாணவர்களுடன் கலந்துரையாடினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.5.2025) பள்ளிக் கல்வித் துறை சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடி அரசு பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் கட்டப்பட்டுள்ள திருச்சிராப்பள்ளி மாவட்ட அரசு மாதிரிப் பள்ளிக்கான புதிய கட்டடத்தை திறந்து வைத்து, மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடினார்.



திருச்சி வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி., அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் உள்ளிட்ட கழக முன்னணியினர் உடனிருந்தனர்.

அரசின் பல்வேறு திட்டங்கள்

# மாணவர்களுக்கு உடனிருந்து வழிகாட்டும்! உதவும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, மே 9-

அரசின் பல்வேறு திட்டங்கள் மாணவர்களின் ஒவ்வொரு அடியிலும் உடனிருந்து வழிகாட்டும்; உதவும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் வெளிவந்ததையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**பள்ளிக்கல்வி நிறைந்து உயர்கல்விக்குள் அடியெடுத்து வைக்கும் மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் வாழ்த்துகள்!**

**நமது பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் சொன்னதுபோல கல்லூரிக் கனவு, உயர்வுக்குப் படி, சிகரம் தொடு, நான் முதல்வன் என நமது அரசின் திட்டங்கள் அடுத்து உங்களின் ஒவ்வொரு அடியிலும் உடனிருந்து வழிகாட்டும், உதவும்.**

**பெற்றோர்கள் பிள்ளைகளின் மீது எந்த அழுத்தத்தையும் ஏற்படுத்தாமல், அவர்கள் விரும்பிய துறைகளைத் தேர்ந்தெடுக்க ஊக்குவிக்க வேண்டும்.**

**தேர்ச்சி பெற இயலாத மாணவர்களும் துவண்டுவிடாதீர்கள். நீங்களும் உயர் கல்வி பெற்று வாழ்வில் வெற்றி பெற்றே தீருவீர்கள். அதற்கான வாய்ப்புகளை நமது அரசு உறுதிசெய்யும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# மாற்றுத் திறனாளி மாணவருக்கு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

சென்னை, மே 9

மாற்றுத்திறனாளி மாணவர் கீர்த்திவர்மாவுக்கு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கு உரிய ஏற்பாடு செய்யப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதி அளித்துள்ளார்.

இரு கைகளும் இன்றி பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் 471 மதிப்பெண்கள் எடுத்த மாற்றுத்திறனாளி மாணவர் கீர்த்திவர்மா உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்ய முதலமைச்சர் அவர்கள் உதவ வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**கண்ணீர் வேண்டாம் தம்பி!**

**மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் அவர்களிடம் உங்களுக்கான மருத்துவச் சிகிச்சைகளுக்கான ஏற்பாடுகளைக் கவனிக்கச் சொல்லியிருக்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

# தீவிரவாதச் செயல்களுக்கு எதிரான அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு!

## அனைத்து கட்சி கூட்டத்தில் கட்சி தலைவர்கள் உறுதி!

புதுடெல்லி, மே 9-

தீவிரவாத செயல்களுக்கு எதிரான அனைத்து நடவடிக்கைகளுக்கும் முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் என டெல்லியில் நடைபெற்ற அனைத்துக் கட்சி கூட்டத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுக்கு எதிரான ஆபரேசன் சிந்தூர் தாக்குதலைத் தொடர்ந்து, புதுடெல்லியில் ஒன்றிய அரசு நேற்று அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டியது. பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், ஒன்றிய அமைச்சர்கள் அமித்ஷா, ஜெய்சங்கர், ஜே.பி. நட்டா, நிர்மலா சீதாராமன் ஆகியோர் பங்கேற்றனர்.

இதேபோல், காங்கிரஸ் கட்சி சார்பில் மல்லிகார்ஜீனா கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி, திமுக சார்பில் டி.ஆர்.பாலு உள்ளிட்ட அனைத்து கட்சியினரும் கலந்துகொண்டனர். கூட்டத்தில், ஆபரேஷன் சிந்தூர் துல்லிய தாக்குதல் குறித்து ஒன்றிய அரசு சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டது.

அப்போது அனைத்து கட்சிகள் சார்பில் ஒன்றிய அரசிடம் பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டு ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. தீவிரவாத செயல்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் என உறுதியளித்தனர். முக்கியமான இந்த கூட்டத்தில் பிரதமர் பங்கேற்காதது ஏன் என எதிர்க்கட்சிகள் சார்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

கூட்டத்துக்கு பின் செய்தியாளர்களிடம் பேசிய டி.ஆர்.பாலு, ராணுவத்தின் நடவடிக்கைக்கு நாடே தலைவணங்குவதாக தெரிவித்தார்.

மு.க.தமிழரசு – நே சிற்றரசு – தயாநிதி மாறன் – தூத்துக்குடி எஸ்.ஜோயல் – பா.பிரகாஷ் – வெ.கௌதமன் பங்கேற்பு!

# ஆயிரம் விளக்கு மேற்கு பகுதியில் கலைஞர் நூலகம் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

## பகுதிச் செயலாளர் வினோத் வேலாயுதம் வேண்டுகோள்!

சென்னை, மே 9-

ஆயிரம் விளக்கு மேற்கு பகுதியில் கலைஞர் நூலகத்தை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று திறந்து வைக்கிறார்.

இது குறித்து பகுதிச் செயலாளர் வினோத் வேலாயுதம் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு தொகுதிக்குட்பட்ட மேற்கு பகுதியில் கலைஞர் நூலகம் திறப்பு விழா துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்கிறார்.

இந்நிகழ்வில் மு.க. தமிழரசு, மாவட்டச் செயலாளர் நே சிற்றரசு, தயாநிதி மாறன் எம்.பி., தூத்துக்குடி எஸ். ஜோயல், பா.பிரகாஷ் வெ.கௌதமன் ஆகியோர் பங்கேற்க உள்ளனர்.

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு தொகுதி மேற்கு பகுதியில் இன்று (09.05.2025 - வெள்ளிக்கிழமை) காலை 10 மணி அளவில் சூளைமேடு சுபேதார் தோட்டம் கலைஞர் நூலகம் திறப்பு விழாவிற்கு துணை முதலமைச்சர் இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு கலைஞர் நூலகத்தை திறந்து வைத்து சிறப்பிக்க உள்ளார்.

இந்நிகழ்ச்சியில் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் வினோத் வேலாயுதம் தெரிவித்துள்ளார்.




தி.மு.க.
இளைஞர் அணி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

ஒன்றிய-நகர-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தென்காசி தெற்கு மற்றும் தேனி தெற்கு ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 10.05.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | தென்காசி தெற்கு | கோல்டன் ஹால், 23, எல்.எஸ்.கட்டடம் (ஆனைமலை டொயோட்டாவுக்கு எதிரே), பிரதான சாலை, எல்.எஸ்.நகர், குத்துக்கல்வலசை. |
| 11.05.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 4.00 மணி | தேனி தெற்கு | அழகர் திருமண மண்டபம், தேனி – மதுரை ரோடு, கொண்டம நாயக்கன்பட்டி, ஆண்டிப்பட்டி. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 06-05-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி